WORKERS' ACTION CENTRE

January 2021

# ஒன்றாரியோ கோவிட்-19 முடக்கம் தகவல்தாள்

## ஒன்றாரியோவின் "வீட்டில் இருக்கவும்" (stay-at-home) கட்டளை என்றால் என்ன?

கோவிட்-19 வைரஸ் தொற்று காரணமாக ஒன்றாரியோவில் ஜனவரி 14, 2021 தொடக்கம் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. பின்வரும் அத்தியாவசிய காரணங்களுக்காக மட்டுமே நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லலாம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

- பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு செல்லல்
- வேலைக்கு செல்லல் (வீட்டிலிருந்து வேலையினை ஆற்ற முடியாதிருந்தால்)
- உடற்பயிற்சி அல்லது செல்லப்பிராணியினை (நாய்) வெளியில் கூட்டிச்செல்லல்
- உணவு, பலசரக்கு, மருந்து, வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குதல்
- அரச, சுகாதார, சட்ட அல்லது நிதி சேவைகளை பெறும்பொருட்டு செல்லல்

நீங்கள் வீட்டியில் இல்லாதபோது பொது உட்புறங்களில் முகக்கவசம் அணிதல் வேண்டும். வெளிப்புறங்களில் சமூக இடைவெளி பேணப்படுதல் வேண்டும். வெளியில் ஐந்து நபர்களுக்கு மேலாகக் கூட இயலாது.

நெருக்கமான தொடர்புகள் அதே குடும்ப அங்கத்தவர்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் தனி பெற்றோராக அல்லது தனியாக வாழ்வீர்களாயின் மட்டுமே இன்னொரு குடும்பத்துடன் நெருக்கமான தொடர்பினை வைத்திருக்கலாம்.

## முடக்கத்திற்கான விதிகளை யார் அமுல்படுத்துகின்றார்கள்? அவற்றிற்கான தண்டனைகள் யாவை?

மாநகர உப விதிகளை (by-law) அமுலாக்கும் அலுவலர்கள், விசேட கான்ஸ்டபிள்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூலம் அமுலாக்கல் இடம்பெறும். முடக்கத்திற்கான கட்டளை மீறப்படுமாயின் $750 அபராதமாக விதிக்கப்படும். இந்த கட்டளையினை பின்பற்றுவதிலிருந்து தனிநபர்களை அல்லது வேலையாட்களை தடுத்தால் அல்லது ஒரு அலுவலருடன் முரண்பட்டால் $1,000 அபராதம் விதிக்கப்படலாம்.

## பொலீஸ் (police) மற்றும் அமுல்படுத்தும் உத்தியோகத்தர்கள் என்னை வீதியில் தடுக்கலாமா?

ஒன்ராரியோ அரசாங்கம் மற்றும் பொலீஸ் துறை பேச்சாளர்கள் இந்த "**வீட்டில் இருக்கவும்**" என்ற கட்டளை பொலீசுக்கு வீதியில் எழுந்தமான பரிசோதனைகளை (random checks) மேற்கொள்ள அதிகாரத்தினை வழங்கவில்லை என கூறியுள்ளனர். நீங்கள் உங்களது விட்டுக்கு வெளியில் இருப்பது மட்டும் "**வீட்டில் இருக்கவும்**" என்ற கட்டளையினை நீங்கள் கடைப்பிடிக்கவில்லை என்பதற்கான போதிய ஆதாரத்தினை கொடுக்காது எனவும் அவர்கள் கூறுகின்றனர்.மறுபுறம் ஒன்ராரியோ நீதி அமைப்பில் ஒரு முறையான இனவாதம் காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

ஒதுக்கப்பட்ட சமூகங்களான கறுப்பினத்தவர், சுதேசிய மற்றும் புலம் பயர் மக்கள் மத்தியில் இந்த சட்ட அமுலாக்கல் ஒப்பீட்டளவில் அதிகமாகவும் கடுமையாகவும் இருக்கின்றது.

சுருக்கமாக குறிப்பிட்டால், இந்த முடக்கள் விதிகள் எழுந்தமான பரிசோதனைகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கவில்லை. ஆனால் நியாயமானதும் சாத்தியமானதுமான காரணங்கள் இருக்குமாயின் அமுல்படுத்தும் அதிகாரிகளுக்கு அவ்விதமான பரிசோதனைகளை மேற்கொள்ள உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதனால் முடக்கல் விதிகள் மீறப்பட்டுள்ளதென சந்தேகங்களின் அடிப்படையில் பொலீஸ் உங்களை இடையில் நிறுத்தலாம்.



#223-720 Spadina Avenue
Toronto, Ontario M5S 2T9
Phone: (416) 531-0778
Fax: (416) 533-0107
www.WorkersActionCentre.org

**பொலீஸ் அல்லது அமுலாக்கல் அதிகாரி என்னை கேள்விக்கு உட்படுத்தினால் நான் என்ன செய்வது? என்னை குற்றப் படுத்தினால் நான் எனது அடையாளத்தினை வெளிப்படுத்த வேண்டுமா?**

- முடக்கல் விதியினை நீங்கள் மீறியுள்ளீர்கள் என்பதற்கான நியாயமானதும் சாத்தியமானதுமான காரணங்கள் இருக்குமாயின் அமுல்படுத்தும் அதிகாரி உங்களது அடையாளத்தினை கேற்கலாம். உதாரணத்திற்கு வெளிப்புறத்தில் சமூக இடைவெளி பேணப்படாமை அல்லது உட்புறத்தில் கூடிய நபர்கள் கூட்டத்தினை சேர்த்தல்.
- தடுத்து நிறுத்தப்படுவதனை குறைக்க வேண்டுமாயின்: எப்போதும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவழி பேணப்படுதல், வெளியில் ஐந்திற்கு மேற்பட்ட நபர்களுடன் கூடுவதனை தவிர்த்தல்.
- இந்த வீட்டில் இருக்கவும் அன்ற கட்டளையின்படி நீங்கள் உங்களது சரியான பெயர், பிறந்த திகதி, விலாசம் என்பவற்றை அலுவலர் கேட்கும்போது வழங்க வேண்டும். நீங்கள் சரியாக அடையாளப்படுத்த மறுக்கும்பது அந்த அலுவலரை இடைமறித்த தாக உங்கள் மேல் குற்றம் சாட்டப் படலாம்.
- உங்களை அடையாளப்படுத்தும்படி கேட்கப்பட்டால் நீங்கள் வாய்மொழி மூலமாக தகவல்களை வழங்கலாம். இந்த "**வீட்டில் இருக்கவும்**" என்ற கட்டளையானது அரசினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ஒன்றினை காட்ட வேண்டுமென்று வற்புறுத்தவில்லை.
- இந்த "வீட்டில் இருக்கவும்" என்ற கட்டளையானது நீங்கள் அத்தியாவசிய வேலையின் நிமித்தம் பிரயாணம் செய்கின்றீர்கள் என்பதற்கான நிறுவனத்தினது கடிதத்தினையும் கோரவில்லை. உங்களுக்கு அது கூடிய பாதுகாப்பு என கருதினால் அதனை நீங்கள் வைத்துக்கொள்ளலாம். உங்களுக்கு ஏற்புடையதாக இருந்தால் கடிதம் ஒன்றினை உங்களது முதலாளியிடம் கேட்கலாம்.
- நீங்கள் தடுத்து நிறுத்தப்பட்டால், எந்த சட்டத்தினை நீங்கள் மீறுகின்றீர்கள் என்பதனை அந்த அலுவலரிடம் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.
- உங்களை நீங்கள் அடையாளப்படுத்திய பிறகு அந்த அலுவலர் சட்ட மீறுதல் தொடர்பாக உங்களை குற்றப் படுத்தாவிட்டால் நீங்கள் மௌனமாக இருப்பதற்கு உரிமை உண்டு. உங்களுக்கு எதிராக பயன்படுத்தக்கூடிய எந்த கேள்விகளுக்கும் நீங்கள் பதில் அளிக்க தேவையில்லை.
- நான் போகலாமா அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ளேனா? என அலுவலர்களை நீங்கள் கேட்கலாம். நீங்கள் தடுத்து வைக்கப்படவில்லை என அவர்கள் கூறினால் நீங்கள் செல்லலாம். கேள்விகள் நிறைவு பெறாத பொழுது நீங்கள் போக எத்தனித்தால் அது மேலதிக குற்றங்களுக்கு இட்டுச்செல்லும்.
- பொதுவாக நியாயமான காரணத்திற்காக உங்களை கைது செய்யவோ அல்லது தடுத்து வைக்கவோ பொலீசுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. நீங்கள் உங்களை அடையாளப்படுத்த முடியாவிட்டால் அது கிரிமினல் குற்றமாகாது. ஆனால் அது தண்டப் பணத்திற்கு உட்படுத்தலாம்.
- பொதுவாக, இந்த உபவிதிகள் (by-law) மற்றும் அமுலாக்கல் அதிகாரிகளுக்கு கைது செய்யவோ தடுத்து வைக்கவோ அதிகாரம் இல்லை. ஆனால் இதற்கான அதிகாரமுடைய பொலீஸ் அல்லது கனடா எல்லை பிரிவினருக்கு (Canada Border Services Agency) அவர்கள் அறிவிக்கலாம்.
- நீங்கள் பொலீசினால் தடுத்து வைக்கப்படலாம் என கவலை கொள்வீர்களாயின் ஒரு பாதுகாப்பான திட்டத்தினை நீங்கள் ஏற்படுத்தி வைத்துக்கொள்ளலாம். உதாரணமாக:
  - உங்களுக்கு நம்பிக்கையான ஒருவரின் தொலைபேசி இலக்கத்தினை மனனம் செய்து வைத்து, உங்களது வழக்கறிஞரை தொடர்பு கொள்ளுமாறு, உங்களது குடும்பத்தினை பராமரிக்கும்படி அல்லது , உங்களது வேலை தளத்திற்கு வேலைக்கு சமூகமளிக்க முடியாத நிலை பற்றி அறிவிக்குமாறு அல்லது ஒரு பிணையாளியாக நிற்குமாறு கேட்கலாம்.
  - உங்களது விடுதலைக்கு உதவி செய்யக்கூடிய நண்பர்கள், அல்லது குடும்பம் அல்லது சமூகத்தினது உதவியினை நாடலாம்.



#223-720 Spadina Avenue Phone: (416) 531-0778
Toronto, Ontario M5S 2T9 Fax: (416) 533-0107
www.WorkersActionCentre.org